www.Padasalai.Net www.TrbTnpsc.com

V7S

விருதுநகர் மாவட்டம்

இரண்டாம் இடைப் பருவ பொதுத் தேர்வு - 2024

வகுப்பு 7

நேரம் : 1.30 மணி | அறிவியல் | மதிப்பெண்கள்: 30

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக: 4×1=4

1) மனிதனின் சராசரி உடல் வெப்பநிலை

அ) 0°C ஆ) 37°C இ) 98°C ஈ) 100°C

2) சிறிய அளவிலான மின்னோட்டங்கள் மில்லி ஆம்பியரில் (mA) அளக்கப்படுகிறது எனில், 0.25 ஆம்பியர் (A) மின்னோட்டத்தினை மில்லி ஆம்பியரில் கூறுக.

அ) 2.5 mA ஆ) 25 mA இ) 250 mA ஈ) 2500 mA

3) ..... என்பது கால-ஒழுங்கு மாற்றத்திற்கு ஒரு எடுத்துக்காட்டாகும்.

அ) பூகம்பம் ஆ) வானில் வானவில் தோன்றுவது

இ) கடலில் அலைகள் தோன்றுவது ஈ) மழைபொழிவு

4) நான் ஒரு விலங்கு செல்லின் வெளிப்புற அடுக்கு. நான் யார்?

அ) செல்சுவர் ஆ) உட்கரு இ) செல்சவ்வு ஈ) உட்கரு சவ்வு

II. கோடிட்ட இடங்களை நிரப்புக: 2×1=2

5) அறை வெப்பநிலையில் பாதரசம் ..... நிலையில் காணப்படுகிறது.

6) உணவு கெட்டுப்போதல் என்பது ..... மாற்றமாகும்.

III. சரியா? தவறா? தவறு எனில் சரியான விடையை எழுதுக: 2×1=2

7) தாவர செல்களில் மட்டுமே பசுங்கணிகங்கள் உள்ளன.

8) ஒரு துணியினை வெட்டுதல் கால ஒழுங்கு மாற்றத்திற்கு ஒரு எடுத்துக்காட்டாகும்.

IV. ஒப்புமைப்படுத்துக: 2×1=2

9) நீர் : குழாய் :: மின்னூட்டம் : .....

10) இயற்பியல் மாற்றம் : கொதித்தல் :: வேதியியல் மாற்றம்

V. எவையேனும் 5 வினாக்களுக்கு மட்டும் விடையளி: 5×2=10

11) மருத்துவ வெப்பநிலைமானியில் காணப்படும் சிறிய வளைவின் பயன்பாடு யாது?

12) இராமுவின் உடல் வெப்பநிலை 99°F. அவர் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளாரா?

13) அரிதிற் கடத்திகள் சிலவற்றைக் கூறுக.

14) மின்கடத்துத் திறனை வரையறு.

15) கால ஒழுங்கு மாற்றங்களுக்கு இரு எடுத்துக்காட்டுகள் தருக.

16) இயற்பியல் மற்றும் வேதியியல் மாற்றங்கள் வேறுபடுத்துக.

17) **பொருத்துக:**

i) நீரின் கொதிநிலை	-	உட்கரு
ii) மின்உருகி	-	பனிக்கட்டி நீராதல்
iii) உருகுதல்	-	100°C
iv) கட்டுப்பாட்டு அறை	-	அதிக மின்பளு

18) செல் நமக்கு ஏன் மிக முக்கியம்?

VI. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி: 2×5=10

19) மருத்துவ வெப்பநிலைமானியின் படம் வரைந்து அதன் பாகங்களைக் குறிக்கவும்.

20) உணவு செரித்தல் ஒரு வேதியியல் மாற்றம். இவ்வாக்கியத்தினை விளக்கவும்.

21) பின்வரும் ஜோடிகளுக்கு இடையே உள்ள வேறுபாடு தருக.

i) செல்சுவர் மற்றும் செல்சவ்வு

ii) பசுங்கணிகம் மற்றும் மைட்டோகாண்ட்ரியா

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com